பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

31 12 2025 WEDNESDAY 7 15 PM

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. மகாராஷ்ட்ரா மற்றும் ஒடிஷா மாநிலங்களில் **20** ஆயிரத்து **668** கோடி ரூபாய் செலவில் சாலை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான இரண்டு திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலான **4** ஆயிரத்து **531** கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

4. **Pralay** ஏவுகணை இன்று வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டது.

5. டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் மகளிர் பந்துவீச்சு பிரிவில் இந்தியாவின் தீப்தி சர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா மற்றும் ஒடிஷா மாநிலங்களின் சாலை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான இரண்டு திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், மகாராஷ்ட்ரா மாநிலத்தில் நாசிக் — சோலாப்பூர் இடையே ஆறுவழிச் சாலை அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

19 ஆயிரத்து 142 கோடி ரூபாய் செலவில், 374 கிலோமீட்டர் தொலைவிற்கு இந்த வழித்தடம் அமைக்கப்பட உள்ளதாக கூறினார்.

இதன்மூலம், நாசிக், Ahilyanagar, சோலாப்பூர் மற்றும் Kurnool நகரங்கள் பயனடையும் என்றார்.

இந்த வழித்தடம் செயல்பாட்டிற்கு வரும்போது பயண நேரம் வெகுவாக குறையும் என்றும் அவர் கூறினார்.

ஒடிஷாவில் இரண்டு வழிப்பாதை தேசிய நெடுஞ்சாலையை ஆயிரத்து 526 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்துவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் சாலை கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

இதற்கிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், 20 ஆயிரத்து 668 கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டு திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம் நடுத்தர வர்க்கத்தினர் கூடுதலாக பயனடைவார்கள் என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

2024-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல், இதுவரை 24 நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2 லட்சத்து 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான இந்த திட்டங்களில் ரயில் மற்றும் மெட்ரோ ரயில் திட்டங்களும் அடங்கும் என்று டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் ஊழல் மற்றும் ஊடுருவல் பிரச்சினையை பிஜேபி முன்நிறுத்தும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று கொல்கத்தாவில் கட்சி நிர்வாகிகள் பங்கேற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

மேற்குவங்கத்தில் ஆளும் திரிணமுல் காங்கிரஸ் அரசு பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி உள்ளதாகவம் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலான 4 ஆயிரத்து 531 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

சர்வதேச வர்த்தக கண்காட்சிகளில் பங்கேற்பதற்கு இந்த இயக்கத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஏற்றுமதி மேம்பாட்டு இயக்கத்தின்கீழ் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சட்டீஸ்கரில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மேம்பாட்டிற்காக **224** கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

**15-**ஆவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், நடப்பு நிதியாண்டிற்கான முதலாவது தவணையாக இந்த நிதி விடுவிக்கப்படுவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

ஜார்கண்ட்டில் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதிம ற்றும் வாழ்வாதாரச் சட்டம் குறித்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதென அம்மாநில பிஜேபி முடிவு செய்துள்ளது.

ராஞ்சியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அம்மாநில பிஜேபி செயல் தலைவர் திரு **Aditya Sahu,** வரும் **8-**ஆம் தேதி தொடங்கி **10-**ஆம் தேதி வரை இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக கூறினார்.

இந்த புதிய சட்டத்தின் பலன்கள் குறித்து பிஜேபி -யினர் பொதுமக்களிடம் எடுத்துரைக்க உள்ளதாகவும் திரு **Aditya Sahu** தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இனி, நடப்பாண்டில் மத்திய அரசின் சாதனைகள் குறித்த தொகுப்பு.

**(Opening Tune — 20 Sec.)**

இதில் இன்று இடம்பெறுகிறது, உற்பத்தித்துறையில் படைக்கப்பட்ட சாதனைகள்.

**(Sound Byte — 156 Sec.)**

<<<<<<>>>>>>

**Pralay** ஏவுகணை இன்று வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டது.

ஒடிஷா மாநிலம் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை தளத்திலிருந்து இரண்டு ஏவுகணைகள் சோதித்து பார்க்கப்பட்டதாக பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் கூறியுள்ளது.

இந்த சோதனையின்போது, அனைத்து அம்சங்களும் திட்டமிட்டவாறு செயலாற்றியதாக பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

தொலைக்காட்சி, சமையல் எரிவாயு அடுப்புகள் மற்றும் குளிர்சாதன பெட்டிகளுக்கான எரிசக்தி சேமிப்பு குறித்த நட்சத்திர

குறியீட்டை வழங்குவது நாளை முதல் கட்டாயமாக்கப்படுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

தாய்லாந்து அரசால் சிறை பிடிக்கப்பட்டிருந்த கம்போடியாவை சேர்ந்த பாதுகாப்புப் படையினர் 18 பேர் விடுவிக்கப்பட்டனர்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் மகளிர் பந்துவீச்சு பிரிவில் இந்தியாவின் தீப்தி சர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

பேட்டிங் பிரிவில் ஷஃபாலி வர்மா ஆறாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

--------------

கென்யா சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Yashaswini Panwar - Saumya Vig இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<END>>>>>>